# 31-12-2024 செய்தி

## எல்லை பிரச்சினை காரணமாக பாகிஸ்தான், தலிபான் இடையே கடும் சண்டை

- 2021-ம் ஆண்டு ஆகஸ்டில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறின. இதைத் தொடர்ந்து அந்த நாட்டில் 20 ஆண்டுகளுக்கு பிறகு தலிபான்கள் மீண்டும் ஆட்சியை கைப்பற்றினர். தலிபான்களின் மூத்த தலைவர் முகமது ஹசன் அகுந்த் புதிய பிரதமராக பதவியேற்று ஆட்சி நடத்தி வருகிறார்.

- அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த போது தலிபான் மூத்த தலைவர்களுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் கொடுத்தது பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு அமைப்பின் ஆதரவுடன் அமெரிக்க படைகளுக்கு எதிராக தலிபான்கள் போரிட்டு வந்தனர்.

- எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக குற்றம் சாட்டி வரும் பாகிஸ்தான் ராணுவம் கடந்த 24, 26 ஆகிய தேதிகளில் ஆப்கானிஸ்தானின் பாக்டிகா மாகாண பகுதிகளில் வான்வழி தாக்குதலை நடத்தியது.

- தற்போது இருநாட்டு எல்லைப் பகுதியான கோஸ்காரி, மதாசன்கர், கோட்ரகா, தாரி மெங்கல் உள்ளிட்ட இடங்களில் பாகிஸ்தான் ராணுவம், தலிபான் வீரர்களுக்கு இடையே தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

**எல்லை பிரச்சினை**

- 1893-ம் ஆண்டில் அப்போதைய பிரிட்டன் அரசின் மூத்த அதிகாரி ஹென்றி மோர்டிமர் தூரந்த், ஆப்கானிஸ்தான், ஒன்றிணைந்த இந்தியா இடையிலான 2,640 கி.மீ. தொலைவு எல்லைக் கோட்டை வரையறுத்தார். இது தூரந்த் எல்லைக் கோடு என்றழைக்கப்படுகிறது.

- பாகிஸ்தான் புதிய நாடான உதயமான பிறகு தூரந்த் எல்லை கோட்டை மதிக்கவில்லை. இதே போல் தற்போதைய தலிபான் அரசும் தூரந்த் எல்லைக் கோட்டை ஏற்க மறுத்து வருகிறது. இரு நாடுகளும் எல்லைப் பகுதிகளை சொந்தம் கொண்டாடுவதால் சண்டை தீவிரமடைந்து வருகிறது.

SURESH'